# காலாண்டு பொதுத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

## பொருளியல்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்:90

### பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20x1=20

1. நுண்ணியல் பொருளியல் எதை உள்ளடக்கியது?
அ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம் ஆ) பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்
இ) தனிநபர் பொருளதார நடிவடிக்கைகள் ஈ) ஒட்டு மொத்தப் பொருளாதாரத் தொடர்பு
2. பொருளாதாரத்தின் தந்தை யார்?
அ) மாக்ஸ் முல்லர் ஆ) ஆடம்ஸ்மித் இ) கார்ல் மார்க்ஸ் ஈ) பால் அ சாமுவேல்சன்
3. தனிக்கருத்திலிருந்து பொதுக் கருத்து பெறும் முறை ______
அ) பகுத்தாய்வு முறை ஆ) தொகுத்தாய்வு முறை
இ) இயல்புரை அறிவியல் ஈ) நெறியுரை அறிவியல்
4. இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்யமாக இருக்கும் போது மொத்தப் பயன்பாடு
அ) குறைவாக ஆ) உச்சமாக இ) பூஜ்ஜியமாக ஈ) எதிர்மறையாக
5. நுகர்வோர் எச்சம் என்ற கருத்துடன் தொடர்புடையவர்
அ) ஆடம் ஸ்மித் ஆ) மார்ஷல் இ) ராபின்ஸ் ஈ) ரிக்கார்டோ
6. தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமமாக இருக்கும் போது அது ______
அ) அலகுத் தேவை நெகிழ்ச்சி ஆ) முற்றிலும் நெகிழ்ச்சியுள்ளது
இ) முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை ஈ) மிகைத் தேவை
7. முதன்மை உற்பத்திக் காரணிகளாவன
அ) உழைப்பு மற்றும் தொழிலமைப்பு ஆ) உழைப்பு மற்றும் மூலதனம்
இ) நிலம் மற்றும் மூலதனம் ஈ) நிலம் மற்றும் உழைப்பு
8. எந்தக் காரணி சமுதாய மாற்றம் உருவாக்கும் முகவர் என்று அழைக்கப்படுகிறது?
அ) உழைப்பாளர் ஆ) நிலம் இ) தொழிலமைப்போர் ஈ) மூலதனம்
9. பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு
அ) எதிர்மறை ஆ) நேர்மறை இ) பூஜ்யம் ஈ) அதிகரிக்கும்
10. உற்பத்தியின் எல்லா மாவட்டங்களிலும் மாறாத செலவுகள் ______
அ) மாறாச்செலவு ஆ) மாறும் செலவு இ) உண்மைச் செலவு ஈ) சமூகச் செலவு
11. ஓர் அலகு உற்பத்திக்கான செலவு ______ செலவாகும்.
அ) சராசரி ஆ) இறுதிநிலை இ) மாறும் ஈ) மொத்த
12. எப்போது நிறுவனம் இலாபம் பெற முடியும்?
அ) TR<TC ஆ) TR - MC இ) TR>TC ஈ) TR = TC
13. விற்பனை செலவிற்கு உதாரணம் ______
அ) கச்சாப்பொருள் விலை ஆ) போக்குவரத்துச் செலவு
இ) விளம்பர செலவு ஈ) கொள்முதல் செலவு
14. பொருளியலில் வருமானப் பகிர்வு என்பது எதனுடன் தொடர்புடையது?
அ) உற்பத்திக் காரணிகள் ஆ) தனி நபர் இ) நிறுவனங்கள் ஈ) வணிகர்கள்
15. பணக் கூலியின் வேறு பெயர் ______
அ) உண்மைக் கூலி ஆ) பெயரளவுக் கூலி இ) சரியான கூலி ஈ) மாற்றுக் கூலி
16. இலாபம் இதற்கான வெகுமதி ஆகும்
அ) நிலம் ஆ) அமைப்பு இ) மூலதனம் ஈ) உழைப்பு
17. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அளவிடப்படுவதைக் குறிப்பிடுவது
அ) GNP ஆ) GDP இ) NNP ஈ) தலாவருமானம்
18. கலப்புப் பொருளாதாரம் என்பது ______
அ) தனியார் துறை மற்றும் வங்கிகள்
ஆ) பொது மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது
இ) பொதுத்துறை மற்றும் வங்கிகள்
ஈ) பொதுத்துறைகள் மட்டும்

www.Padasalai.Net

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



19. இரயத் வாரி முறை முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம்
அ) கேரளா ஆ) வங்காளம் இ) தமிழ்நாடு ஈ) மகாராஷ்டிரா
20. வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதன் முக்கிய நோக்கம்
அ) தனியார் சமூக நலம் ஆ) சமூக நலம் இ) வருவாய் ஈட்ட ஈ) தொழில் முற்றுரிமை

## பகுதி – II

II ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்
வினா எண் – 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும் 7x2=14

21. நுண்பொருளியல் என்றால் என்ன?
22. பண்டங்கள் என்றால் என்ன?
23. கிஃபன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?
24. உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்து?
25. மாறாச் செலவு என்றால் என்ன?
26. விற்பனை செலவு என்றால் என்ன?
27. பணக்கூலி மற்றும் உண்மைக் கூலியை வேறுபடுத்துக.
28. முன்னேறிய பொருளாதாரத்தின் இரண்டு இயல்புகளைக் கூறுக.
29. பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள் யாவை?
30. நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக.

## பகுதி – III

III ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்
வினா எண் – 40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும் 7x3=21

31. பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?
32. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?
33. காப்–டக்லஸ் உற்பத்தி சார்பை விளக்குக.
34. மாறாச் செலவு – மாறும் செலவு வேறுபடுத்துக.
35. அங்காடியின் இயல்புகள் யாவை?
36. கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.
37. பொருளாதார முன்னேற்றம் – வரையறு.
38. PQLI என்றால் என்ன?
39. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
40. தொழில் முனைவோரின் பணிகள் யாவை?

## பகுதி – IV

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 7x5=35

41. அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக. (அல்லது)
ஆ) பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை விவரி.
42. அ) தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி. (அல்லது)
ஆ) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.
43. அ) சம அளவு உற்பத்திக் கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரி. (அல்லது)
ஆ) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரி.
44. அ) பல்வேறுபட்ட நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கு இடையேயான தொடர்பை விளக்குக. (அல்லது)
ஆ) நிறைவுப் போட்டியின் இயல்புகளை விளக்குக.
45. அ) நிறைவுப் போட்டியில் எவ்வாறு விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுகிறது? (அல்லது)
ஆ) ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி.
46. அ) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி. (அல்லது)
ஆ) காந்தியப் பொருளாதாரக் கருத்துக்களை சுருக்கமாக எழுதுக.
47. அ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறுதொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி. (அல்லது)
ஆ) வணிக வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி.

***/***

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com